மாகக் கொடுப்பது என்றும், ஊராட்சி ஒன்றியம் 4 ஆயிரம் ஈட்டுத் தொகை கொடுப்பது என்று ஏற்படுத்தியிருக்கிறோம். பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களின் நிதியைப் பெருக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பல நர்சரி பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவற்றில் படிக்கும் மாணவர்களை மேலே சேர்ப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தைப் பொறுத்த வரை துவக்கப்பள்ளிகளைத்தான் ஏற்படுத்துகின்றன. நர்சரிகள் தனியார்களிடம் விடப்படுகின்றன. அங்கே படிக்கின்ற மாணவர்களை மேலே சேர்ப்பதில் சிக்கல்கள் இருந்தால் அவற்றை நீக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

மிட்டூர் அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்

*501 வினா—**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாணியம்பாடித் தொகுதி மிட்டூரில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து அப்பள்ளி கட்டடக் குழுவினரால் 1971 ஜூலை திங்களில் வசூல் செய்யப்பட்ட பணம் தொடர்பாக புகார் முறையீடொன்று அமைச்சரிடம் கொடுக்கப்பட்டதா ?

(இ) இது தொடர்பாக அரசு விசாரணைக்கு உத்திரவிட்டிருக்கின்றதா ?

(உ) ஆமெனில், அவைகளின் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) பள்ளி கல்வி இயக்குநரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

தொல்பொருள் ஆய்வுத்துறை

*502 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் பழங்கால வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள் புதை பொருட்கள், ஆகியவற்றினைக் கண்டறிய தொல்பொருள் ஆய்வுப் பிரிவில் சிறப்புப் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

503 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் இதுவரை கண்டறிந்துள்ள சான்றுகளையெல்லாம் தொகுத்து நூலாக வெளியிட செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம். தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 1969-ம் ஆண்டு முடிய செய்த பணிகளைத் தொகுத்து அதன் ஆண்டு மலராக 'தமிழகம்' என்ற பெயரில் ஏற்கனவே வெளியிட்டுள்ளது. 1970-ம் ஆண்டு மலர் விரைவில் வெளிவரும். ஒவ்வொரு ஆண்டின் பணியும் ஆண்டு மலர்களாக வெளியிடப்படும்.

தவிர சென்னை நகரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் படியெடுத்த 500 கல்வெட்டுகள் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. அச்சாகும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

தவிர தமிழ் நாட்டு வரலாற்றுச் சின்னங்களை பற்றிய வரலாற்று நூல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டு வருகின்றன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில், எந்தெந்த வகையில் தொல்பொருள் ஆராய்ச்சி நடத்த திட்டமிடப் பட்டுள்ளது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல் வெட்டு ஆராய்ச்சி பிரிவு, அகழ் ஆய்வுப் பிரிவு பாதுகாப்புப் பிரிவு என்கிற மூன்றுவகையில் தொல்பொருள் ஆராய்ச்சிப் பிரிவினர் செயல்படுகின்றனர். சென்னை பல்கலைக்கழக தொல்பொருள் ஆராய்ச்சி மாணவர்கள் சிலயிடங்களை ஆராய்ந்து வருகிறார்கள். எந்த எந்த இடங்களில் அகழ் ஆய்வு நடைபெறுகிறது என்கிற குறிப்பு இல்லை. தனிக் கேள்விபோட்டால் விவரம் சேகரித்துத் தரப்படலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, when officers of the Archaeological Department go to rural areas to decipher inscriptions, they are not given vehicles and other facilities to do their work properly. So they are not able to do any work and go away. Therefore, may I request the Hon. Minister to kindly consider the provision of vehicular and other facilities to them?